**பாலிந்தநுவர பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாலிந்தநுவர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் கூட்டுப் பெறுமதி ரூபா 5,083,769 தொகையான கட்டிட நிர்மாணம் மற்றும் ரூபா 39,204 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | இருப்புப் பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா. 2,092,359 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா. 1,234,000 தொகையான 16 | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

அங்குல படகின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | | |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, உரித்துறுதி மற்றும் கையளித்தல் கட்டளை, மெய்மையாய்வுச் சபை அறிக்கை மற்றும் பொருட் பதிவேடு என்பன இல்லாமையினால் ரூபா 63,680,327 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். |

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அகலவத்த பிரதேச சபையில் இருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா. 5,931,815 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அகலவத்த பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பாலிந்தநுவர பிரதேச சபையில் இருந்து கிடைக்கவேண்டிய ரூபா. 5,342,424 தொகை மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 7,782,632 தொகை காட்டப்பட்டிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டதன் பின்னர் மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா. 622,055 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தப் பணம் தவறிப் போயிருந்ததுடன் செயற்திட்டத்தின் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு இந்த பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |
| (i) | 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட அசைவுறாத ஆதனங்களின் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய கண்டுபிடிப்புக்களுக்காக பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. |
| (ii) | 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரி அறிவிடலின் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 16,760,000 | சபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர்வரும் வருடத்தின் போது பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1988 மே 17 - ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | ஆதன வரிகளின் கீழ் வருகின்ற ஆதனங்களுக்கு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,712,853 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,410,156 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,433,300 | 2,220,147 | 2,277,484 | 177,290 | 2,468,245 | 2,179,736 | 2,595,487 | 263,712 |
| (ii) | வாடகை | 6,100,300 | 5,381,600 | 5,461,355 | 357,963 | 5.452,000 | 4,092,313 | 4,345,591 | 249,638 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 350,000 | - | 411,408 | - | 250,000 | - | 204,603 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,068,400 | 326,747 | 16,135,112 | 8,410,709 | 11,193,000 | - | 4,029,357 | 13,927,229 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை வருமானம் ரூபா 201,917 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 55,513 தொகை அதாவது 27 | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வரி மீதியில் 01 – 03 ஆண்டுகள் வரையான நிலுவை ரூபா 24,487 தொகையும், 03 – 05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 18,992 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை 42,456 ஆக இருந்தன. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஆதனங்களைத் தடைசெய்து நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.3 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஏக்கர் வரி நிலுவை வருமானம் ரூபா 54,141 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 31,704 தொகை அதாவது 59 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 1952இன் 06ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உபவிதி) சட்டத்தின் பிரகாரம் சபையின் செயலாளரின் அதிகாரத்தைப் பெறாமல் 2018 ஆம் ஆண்டில் காட்சிப்படுத்தப்பட்ட 50 அறிவித்தல் பதாதைகளுக்காக ரூபா. 78,600 தொகை அறவிட வேண்டியிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பணம் அறவிடப்பட வேண்டும். | பணம் செலுத்தாத பதாதைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) சபை அதிகாரப் பிரதேசத்தின் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடங்களில் தரித்து வைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளை பதிவு செய்து | உரிய கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம்<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 900,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்படவில்லை. மீளாய்வாண்டிற்காக ரூபா 1,500,000 தொகை சிட்டையிடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் பண வருமானம் ரூபா 2,400,000 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | முத்திரைக் கட்டணம்<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 13,000,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்படவில்லை. ஆண்டின் சிட்டையிடல் ரூபா 5,300,000 ஆக இருந்ததுடன் அந்தத் தொகையில் ரூபா 9,990,000 முற்பணம் மாத்திரம் ஆண்டில் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,310,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 06 பிரதான விடயங்களுக்காக மாத்தரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | பிரதேச சபைகள்அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உபவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 60.1 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்கான கட்டு நிதி தேவை தீர்மானிக்கப்பட்டு கட்டுநிதித் திட்டமொன்று செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. வீதி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலைகளை அமுல்படுத்துவதற்காக பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா. 1,200,000 தொகைக்குறிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டங்கள் இனங்காணப்படவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) பாதீட்டு நிதிஏற்பாட்டை விஞ்சி செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் | | |
| சபை வேலைகளுக்காக பாதீட்டிலிருந்து ரூபா 1.2 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் ரூபா 4,191,179 தொகை ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகராம் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2,991,170 | பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மேலதிக செலுத்துதலுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| தொகைக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | |
| கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,460,515 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் கழிவுகளுக்காக கூட்டுப்பசலை செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு அதன் மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 218,784 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசம் முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை அதிகார பிரதேசத்தை மேவுகை செய்யும் வகையில் கழிவுப் பொருட்களை சேகரித்தல் மற்றும் ஆதனவரி சேகரித்தல் மேற்கொள்ளப்படுவதில் லை. ஆதனவரி வலையம் அமுல்படுத்தப்பட்டு கழிவுகளை சேகரிப்பதை விரிவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும் அபிவிருத்தி இரக்குகளை அடைந்து கொள்வதற்காக போதியலவான வழிமுறைகள் எடுக்கப்படவில்லை. மேலும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31ஆம் திகதியில் BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது அறிமுகப்படுத்தியுள்ள மூன்று புதிய கொள்கை உபாயவழிகள் அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை. | உரிய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அகலவத்த பிரதேச சபை 2016 ஏப்ரல் 15ஆம் திகதி முதல் பாலிந்தநுவர மற்றும் அகலவத்த என இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக பாலிந்தநுவர பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்து ஒதுக்குவதற்கு 2019 யூன் 20ஆம் திகதி வரையிலும் முடியாதிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்தளித்தல் இயலுமான வரை விரைவான மேற்கொள்ளப்படவேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெற்று சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது போயா தினத்தன்று பன்றி இறைச்சி விற்பனை செய்யும் நிலையத்தில் வாடகையாளர் தொடர்ந்தும் வாடகை செலுத்தாமல் புறக்கணித்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா. 84,060 தொகையான தண்டப்பணம் செலுத்தவேண்டியிருந்ததுடன் இந்தத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தண்டப்பணத்தை நடவடிக்கை எடுக்கவேண்டும். | இந்த நிழலுவையை அறவிடுவதற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 68 இன் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற அவிபிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பில் வரி விதிக்கப்பட்டிருக்பவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணி பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டு வரல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய வீதிகளை சரியாக இனங்கண்டு பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும் வர்த்தமாணியில் பிரசுரிப்பதற்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படவேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.2 சொத்துக்களின் பாகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபை அலுவலகம் மற்றும் பொது நூலகம் அமைந்துள்ள காணியில் பின்பக்கத்தில் 10 பேர். அளவான காணியில் அனுமதியற்ற நபர் ஒருவர் பல வருடமாக குடியிருந்து வருகின்றார். | அனுமதியற்ற நபரை அகற்றி சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் இந்த இடத்தை வாடகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) 2014 நவம்பர் மாதத்தில் திவிநெகும திணைக்களத்திலிருந்து கிடைத்த GI குழாய்களில் 264 குழாய்கள் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | உரிய நட்டத்தை பொறுப்பு வாய்ந்த நபரிடமருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து விசாரணையொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 32 மயான நிலங்களில் 02 மாத்திரம் சபைக்குச் சொந்தமாக இருந்ததுடன் மிகுதி 30 மயான நிலங்களையும் கையேற்பதற்கு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மயான நிலங்களை கையேற்பதற்க | மயான நிலங்களை கையேற்பதற்குத் தேவையான அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கவேண்டும். | |

### 3.3.4 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் ஹியும் குழாய்கள் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டு விலைக்குழுவின் பரிந்துரை பெறப்படாமல் மற்றும் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர் தொரிவுசெய்யப்படாமை போன்ற காரணங்களால் சபைக்கு ரூபா 224,000 தொகை நட்டம் ஏற்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஹியும் குழாய்கள் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பி மேற்கொள்ளப்படுவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும். |

### 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் பாதீட்டில் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9.73 மில்லியன் தொகைக்காக முறையான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக முறையான பிரகாரம் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 6.8 மில்லியன் கிரயமான 04 செயற்திட்டங்கள் முறையாக வடிவமைக்கப்பட்டு அங்கீகாரம் பெறாமல் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நேர் ஒப்பந்த முறையில் கீழ் ஒப்பந்தங்களை கையளிப்பதற்காக சங்கங்களைத் தெரிவு செய்யும் போது உரித்தாக்கப்படவேண்டிய தேவைகள் கவனத்தில் கொள்ளப்படாமல் ரூபா 4.2 மில்லியன் தொகையான ஒப்பந்தங்கள் சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை வழிகாட்டிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | தார் இட்டு அபிவிருத்திழ செய்யப்பட்ட வலபிடிய கந்த வீதியில் கல் வெளிப்பட்டு தரம் குறைவான மட்டத்தில் காணப்பட்ட போதும் ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 492,960 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களுக்காக செலுத்துவதற்கு முன் அவற்றின் தரம் சரியாக பௌதீக ரீதியில் பரிசோதனை செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.2 மாகாண கணக்குகள் செயற்குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி 04 ஆந் திகதி நடைபெற்ற மாகாண கணக்குகள் செயற்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 1.2(ஈ), 1.3.3(i), 1.3.3(vi), 1.5, 1.6(ii), 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.1.1(இ), 2.2(ஆ)(i), 2.2.4(ஆ)(ii) மற்றும் 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 1.2.2(ஆ), 1.3.2 என்ற பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த கட்டளை 2019 யூன் 22 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | கணக்குகள் செயற்குழுவின் கட்டளை அமுல்படுத்தப்பட வேண்டும். | தேவையான பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |